# வாக்குமூலம்
## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்
## வழக்கு எண்: CC –210/2025

**வழக்கு சாட்சி :PW2(கூடுதல் சாட்சி 1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலமுருகன் | தொழில் | : | காவல் சிறப்பு உதவி ஆய்வாளர், அன்னவாசல் காவல் நிலையம், |
| தந்தை பெயர் | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுக்கா | | | | : | |

Solemnly affirmed by Thiru. Abraham Selvin , JA of this Court in accordance with the provisions of Act X of 1873

**(எதிரி ஆஜர் இல்லை .எதிரி தரப்பில் பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on** the **day 27th day of February 2026.**

**As Per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No. 74663/2024/F1 – Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aathar Card of the Witness verified.**

**சாட்சியானவர் நீதிமன்றத்திற்கு வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :–**

1. நான் தற்போது அன்னவாசல் காவல் நிலையத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரி காவல் உதவி ஆய்வாளர் திருமதி.நிகல்யா வேறு காவல் நிலையத்திற்கு பணிமாறுதலாகி சென்றுவிட்டதால் இவ்வழக்கின் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு நீதியின் நலன் கருதி அவருக்காக என்னை கூடுதல் சாட்சியாக விசாரிக்க அனுமதி பெற்று சாட்சியம் அளிக்கிறேன். மேற்சொன்ன காவல் உதவி ஆய்வாளர் அவர்களின் கையொப்பம் மற்றும் கையெழுத்து ஆவணங்களை பொருத்து எனக்கு தெரியும்.

2. கடந்த 23.05.2025 தேதி காவல் உதவி ஆய்வாளர் திருமதி.நிகல்யா நிலைய பொறுப்பில் இருந்த போது காலாடிப்பட்டியைச் சேர்ந்த சின்னையா மனைவி பாக்கியம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினைப் பெற்று அன்னவாசல் காவல் நிலைய மனு எண்.260/2025 கொடுக்கப்பட்டு, பின்பு நிலையக் குற்ற எண்:128/2025 சட்டப்பிரிவுகள் 296(b),115(2),351(2) BNS ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். ( **மேற்படி புகார் மனு அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது** .

3. பின்னர் புலன்விசாரணை அதிகாரி அன்றைய தினமே சம்பவ இடத்திற்கு காலை 09.00 மணிக்கு சென்று சாட்சிகள் சின்னையா மற்றும் அரவிந்த் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. பட்டியல் சாட்சிகளான 1 முதல் 6 வரையானவர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரியை கைது செய்து குற்ற காரணம் கூறி கைது செய்து தக்கநிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

5. இவ்வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டதிலிருந்து சாட்சிகளை விசாரணை செய்ததிலிருந்தும் எதிரி செல்வராசு வாதியை பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசி , கையால கன்னத்தில் அடித்த கொலை மிரட்டல் செய்ததாக தெரியவருவதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான 296(b),115(2),351(2) BNS யிலிருந்து இதச சட்டப்பிரிவுகள் 296(b),115(2),351(2) BNS r/w.4 of TNPHW Act வாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். **அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

அரசு தரப்பில் அனைத்து சாட்சிகளையும் விசாரணை செய்து காவல் உதவி ஆய்வாளர் திருமதி.நிகல்யா ஆஜர் எதிரி மீது மேற்சொன்ன பிரிவுகளின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எ.த.கு.வி</u>**

அ.சா. 1 கொடுத்த புகாரை முறையான முதல் விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு ஆவணங்களான மாதிரிவரைபடம், பார்வைமகஜர், வழக்கின் தோதிற்காக காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் கண்ட அரசுத்தரப்பு சாட்சிகளை சரிவர புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த புகாரை சரிவர புலன் விசாரணை செய்யாமல், குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.